# பகுதி IV (அ) — மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

மேல் மாகாண மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டம்

அறிவித்தல்

மேல் மாகாணத்தின் கூட்டுறவு விடயம் தொடர்பான அமைச்சர் ரத்னசிறி விக்ரமநாயக்க ஆகிய நான், மேல் மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டத்தின் 01 ஆம் இலக்கப் பந்தியில் என்னிடம் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மேல் மாகாண மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டத்தை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

ரத்னசிறி விக்ரமநாயக்க,
கூட்டுறவு அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

கொழும்பு,
1994 யூலை 21.

மேல் மாகாண மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டம்

மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என அறியப்படவேண்டிய மாகாண ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கும் கூட்டிணைப்பதற்கும், மேல் மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர் தொடர்பில் விசேட ஏற்பாட்டைச் செய்வதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு நியதிச் சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இந்நியதிச் சட்டமானது இலங்கை மேல் மாகாணத்தின் மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக் கூடியவாறான (இதனகத்தின் பின்னர் " நியமித்த தேதி " எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். *சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

2. அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், இந்நியதிச் சட்டத்தின் இனிமேல் வரும் ஏற்பாடுகளிலிருந்து — *இந்நியதிச் ...*

(அ) அதன்கண் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான ஏதேனும் ... கூட்டுறவுச் சங்கங்களை ; அல்லது

(ஆ) அவ்வாறு குறித்துரைக்கப்பட வேண்டியவாறான ஏதேனும் அத்தகைய கூட்டுறவு

விலக்களிக்கலாம் என்பதுடன் அதற்கிணங்க, அத்தகைய ஏற்பாடுகளில் " கூட்டுறவுச் சங்கம் " என்னும் சொல்... காணப்படுமிடங்களிலெல்லாம் எந்தக் கூட்டுறவுச் சங்கம் தொடர்பாக ஏதேனும் அத்தகைய கட்டளை அப்போதைக்... வலுவில்லாதிருக்கின்றதோ அந்தக் கூட்டுறவுச் சங்கம் எனப் பொருள்படுமாறு வாசிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

### பாகம் I

மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அமைப்பும், தத்துவங்களும், பணிகளும்

3. இந்நியதிச் சட்டத்தின் நோக்கத்துக்காக, மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என அழைக்கப்படவேண்டியதும் அறியப்படவேண்டியதுமான அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். *கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவைத் தாபித்தல்.*

4. (1) ஆணைக்குழுவானது இப்பிரிவின் இனிமேல் வரும் ஏற்பாடுகளுக்கிணங்க அமைக்கப்படுதல் வேண்டும். *ஆணைக்குழுவை அமைத்தல்.*

(2) ஆணைக்குழுவானது மாகாணத்தின் பிரதான அமைச்சரின் ஆலோசனையுடன் அமைச்சரினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆளொருவர் —

(அ) கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர் ஒருவராக அல்லது கடந்தகால ஊழியராக ; அல்லது

(ஆ) கூட்டுறவு சங்கங்களினால் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஏதேனும் வகுதியைச் சார்ந்த ஆட்களின் சம்பளங்களை, கூலிகளை அல்லது சேவை நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துவதனை அதன் குறிக்கோளாகக் கொண்ட, அமைச்சரின் அபிப்பிராயப்படி, பணியாளர் கழகமொன்றாக அல்லது தொழிற்சங்கம் ஒன்றாக இருக்கின்ற ஏதேனும் ஆட்கள் குழுவின் உறுப்பினர் ஒருவராக ; அல்லது

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பிலான சட்டத்துக்கிணங்க கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலர் ஒருவராக ; அல்லது

(ஈ) அப்போதைக்குப் பாராளுமன்ற உறுப்பினராக, மாகாண சபை உறுப்பினராக அல்லது வேறு ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினராக,

இருந்தால், அவர் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராகார்.

ஆணைக்குழுவைக் கூட்டிணைத்தல்.

5. ஆணைக்குழுவானது இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அதன் கூட்டிணைப்புத் தன்மையில் அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்.

6. ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் நியமிக்கப்பட்டதிலிருந்து மூன்று வருடக் காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் ; ஆயின், ஏதேனும் அத்தகைய நியமன காலப்பகுதி எப்படியிருப்பினும் —

(அ) எவரேனும் அத்தகைய உறுப்பினர் எந்நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம் அல்லது அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம் ; அத்துடன்

(ஆ) எவரேனும் அத்தகைய உறுப்பினர் 4 (3) ஆம் பிரிவின் நியதிகளின்படி தகுதியற்றவராக வந்ததன்மேல், அவ்வுண்மை காரணமாகவே தமது பதவியை வறிதாக்குதல் வேண்டும் :

ஆயின், மேலும் எவரேனும் அத்தகைய உறுப்பினரின் இறப்பு, பதவிவிலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் காரணமாக ஏற்பட்ட ஏதேனும் வெற்றிடத்தை நிரப்புவதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள், முன்னதாகவே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, எந்த உறுப்பினரின் இடத்திற்கென அவர் நியமிக்கப்பட்டாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மாத்திரம், அதற்கு மேற்படாது, பதவிவகித்தல் வேண்டும்.

தலைவரும் அலுவலைக் கொண்டு நடாத்துதலும்.

7. (1) அமைச்சர் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரை அதன் தலைவராக நியமித்தல் வேண்டும். தலைவர் தாம் சமுகமாயிருக்கும் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் தலைவர் சமுகமாயிராவிட்டால், அங்கு சமுகமாயிருப்பவர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் அதில் தலைமைதாங்கலாம்.

(2) ஆணைக்குழுவின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் இரண்டு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) ஏதேனும் கூட்டத்தில் ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள் மாத்திரமே சமுகமாயிருந்து, ஏதேனும் விடயத்தின்மீது எடுக்கப்படவேண்டிய ஏதேனும் முடிவுபற்றி அத்தகைய உறுப்பினர்கள் தமது அபிப்பிராயத்தில் பிளவுபட்டிருந்தால், அத்தகைய விடயமானது ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் சமுகமாயிருக்கும் கூட்டத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் விடயத்தின்மீது எடுக்கப்படவேண்டிய முடிவுபற்றி எக்கூட்டத்திலேனும் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களும் தமது அபிப்பிராயத்தில் பிளவுபட்டிருந்தால், அவ்விடயமானது சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை அபிப்பிராயத்துக்கிணங்க முடிவுசெய்யப்படுதல் வேண்டும் ; ஆனால் உறுப்பினர்கள் சரிசமமாகப் பிரிந்திருந்தால், அப்போது தலைவர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இந்நியதிச் சட்டத்தில் அல்லது அதன் கீழாக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் கருமம் தொடர்பில், ஆணைக்குழு அதன் சொந்த நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(6) ஆணைக்குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக அல்லது அதன் உறுப்பினர்களில் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகாது.

8. மேல்மாகாண ஆளுநரின் சம்மதத்துடன் மேல் மாகாண சபையின் நிதி அமைச்சரின் ஆலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியமும் அத்தகைய படிகளும் தலைவருக்கும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்படுதல் வேண்டும். — உறுப்பினர்களின் ஊதியம்.

9. ஆணைக்குழுவின் செயலாளர் ஒருவரும் அவருக்கு உதவுவதற்காகப் பணியாட்தொகுதியொன்றும் இருத்தல் வேண்டும். — செயலாளரும் ஏனைய அலுவலர்களும்.

10. (1) ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், முதலாவதாக நியமிக்கப்பட்டதும் இந்நியதிச் சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்ட படிவத்திலான சத்தியத்தினை எடுத்தல் அல்லது உறுதிமொழியொன்றைச் செய்தல் வேண்டும். — ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் அலுவலர்களும் சத்தியஞ் செய்தல்.

(2) ஆணைக்குழுவின் செயலாளரும் தலைவரினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தக்கூடியவாறான ஆணைக்குழுவின் அத்தகைய வேறு அலுவலர்களும் முதலாவதாக நியமிக்கப்பட்டதும், இந்நியதிச் சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்ட படிவத்திலான சத்தியத்தினை எடுத்தல் அல்லது உறுதிமொழி ஒன்றைச் செய்தல் வேண்டும்.

11. (1) ஆணைக்குழு பின்வரும் தத்துவங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் :— — ஆணைக்குழுவின் தத்துவங்கள்.

(அ) கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊழியர்களை ஆட்சேர்க்கும் முறைகளும், தொழில் நிபந்தனைகளும், நியமனங்களைச் செய்யும்போதும் ஒரு கூட்டுறவுச் சங்கத்திலுள்ள ஒரு பதவியிலிருந்து அதே சங்கத்திலுள்ள வேறொரு பதவிக்குப் பதவி உயர்வுகளைச் செய்வதிலும் பின்பற்றப்படவேண்டிய நெறிகளும் தொடர்பிலான எல்லாக் கருமங்களையும் தீர்மானித்தல் ;

(ஆ) கூட்டுறவுச் சங்க ஊழியர்களான ஆட்சேர்ப்பதற்கான பரீட்சைகளை நடாத்துதல் அல்லது அத்தகைய பரீட்சைகளை நடாத்தும் நோக்கத்துக்காக பரீட்சகர் சபைகளை நியமித்தல், அத்துடன் பரீட்சைகளுக்குத் தோற்றும் தேர்வுநாடிகளிடமிருந்து கட்டணங்கள் அறவிடல் ;

(இ) அத்தகைய ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு அவசியமான தகைமைகளைத் தீர்மானித்தலும், ஏதேனும் வகுப்பிலுள்ள அல்லது தரத்திலுள்ள ஏதேனும் அத்தகைய பதவிக்கு அல்லது பதவிகளுக்கு உரிய சம்பள அளவுகளை நிர்ணயித்தலும், ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் காலத்துக்குக் காலம் அத்தகைய சம்பள அளவுகளை மீளாய்வு செய்தல் அல்லது சீராக்குதல், அத்துடன் கூட்டுறவு ஊழியர்களின் வேதனத்தையும் சேவை நிபந்தனைகளையும் தீர்மானிப்பதில் உதவுவதற்கு அவசியமானதென ஆணைக்குழு கருதக்கூடியவாறான அத்தகைய உசாத்துணை அமைப்பைத் தாபித்தல் ;

(ஈ) ஏதேனும் வகுப்பில் அல்லது தரத்தில் உள்ள ஏதேனும் பதவிக்கு அல்லது பதவிகளுக்கு ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் சம்பள அளவுகளுக்கிணங்கச் சம்பளங்கள் கொடுக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களைத் தேவைப்படுத்துதல் ;

(உ) அதன் ஊழியர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் அதன் உரிமைகளைப் பிரயோகிக்கையில் ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையை அல்லது நடவடிக்கை முறைகளைத் தீர்மானித்தல், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளாக அதன் ஊழியர்களுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்தி முடிக்குமாறு ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தை வேண்டுதல் ; அத்துடன் ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தினால் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுக்காற்றுக் கட்டளைகள் வாயிலாக எழும் மேன்முறையீடுகளை விசாரித்தல் ;

(ஊ) ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்கள் தொடர்பிலான விதித்துரைக்கப்பட்ட பதிவேடுகளை வைத்திருக்குமாறு அச்சங்கத்தைக் கோருதல் ;

(எ) ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தின் எவரேனும் ஊழியர் தொடர்பில் ஆணைக்குழு தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய கோப்புகள், வேறு ஆவணங்கள் அல்லது தகவல் என்பவற்றை குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதிக்கு முன்னர் கொடுத்துதவுமாறு அச்சங்கத்தைக் கோருதல் ;

(ஏ) அத்தகைய குழாத்துக்கு அல்லது குழாம்களுக்கு ஆணைக்குழுவினால் ஆற்றுப்படுத்தப்பட்ட மேன்முறையீடுகள்மீது அவசியமாகக் கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்வதற்கான அலுவலர்களின் குழாத்தை அல்லது குழாம்களைப் பெயர்குறித்து நியமித்தலும், அதன்மீது ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடுதலும் ;

ලංකා ජාතික පුස්තකාලය

(ஐ) ஊழியர்களின் நடத்தை விசாரணையின் விடயப்பொருளாக இருந்து, சங்கத்தின் முடிவுக்கெதிராக ஊழியர்கள் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்துள்ளவிடத்து, அத்தகைய சங்கத்தின் எவரேனும் ஊழியர்கள் தொடர்பில் ஆணைக்குழுவினால் கொடுக்கப்படக்கூடியவாறான, மீளத் தொழிலுக் கமர்த்துதல் தொடர்பிலான அறிவுறுத்தல்கள் உட்பட, அத்தகைய அறிவுறுத்தல்களை நிறைவேற்றுமாறு அத்தகைய சங்கத்தைத் தேவைப்படுத்துதல் ;

(ஒ) ஊழியர்களுக்கு அவர்களது சேவைகள் முடிவுறுத்தப்படுவதன்மீது வழங்கப்படக்கூடிய பணிக்கொடை அல்லது வேறு நன்மைகள் கொடுக்கப்படும் பொதுக் கோட்பாடுகளைத் தீர்மானித்தல் ;

(ஓ) இந்நியதிச் சட்டத்தின் தொழிற்பாட்டிலிருந்து ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தை அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் வகுப்பை விலக்கிவிடுவது தொடர்பில், ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் அமைச்சருக்கு ஆலோசனை அளித்தல் ;

(ஔ) மாகாண சபையின் அங்கீகாரத்தின் பின்னர் அமைச்சரால் ஆக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்படக் கூடியவாறான கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அவற்றின் ஊழியர்கள் தொடர்பில் அத்தகைய வேறு தத்துவங்களைப் பிரயோகித்தல்.

(2) ஓராமுட்பிரிவினால் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில், ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட எவையேனும் முடிவுகளை அல்லது தீர்மானங்களை திரிபுபடுத்தலாம், வேறுபடுத்தலாம், மீளாய்வு செய்யலாம் அல்லது தள்ளிவைக்கலாம்.

நிதி ஏற்பாடுகள்.

12. ஆணைக்குழுவின் செலவுகள், மாகாணசபை ஆண்டு ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தினால் (அல்லது வேறேதேனும் குறைநிரப்பு ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தினால்) அந்நோக்கத்துக்கென ஏற்பாடு செய்யப்பட்ட பணங்களிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் ஊழியர்களும்

கூட்டுறவுச் சங்கம் தொழில்தரு நராக இருத்தல்.

13. எவரேனும் ஊழியர்களுக்கு அதன் நிதிகளிலிருந்து சம்பளமும் வேறு வேதனாதிகளும் அப்போதைக்குக் கொடுக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கம் அத்தகைய ஊழியரின் தொழில்தருநராகக் கருதப்படுதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் ஊழியர்களும் ஆணைக்குழுவின் பணிப்புக்கு அமைந்தவர் களாதல்.

14. ஏதேனும் கூட்டுறவுச் சங்கமும் அச்சங்கத்தின் எவரேனும் ஊழியரும் இந்நியதிச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் கொடுக்கப்படக்கூடிய அத்தகைய பணிப்புகளுக்கு அமைந்ததாதல் வேண்டும் ; அத்துடன் 11(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, இந்நியதிச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளையும் தத்துவங்களையும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் ஆணைக்குழுவின் எல்லா முடிவுகளும் இறுதியானவையாதல் வேண்டும் என்பதுடன் அமைச்சரினால் 2 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைமூலம் இந்நியதிச்சட்டத்தின் தொழிற்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படாதனவான அத்தகைய எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களையும் அச்சங்கங்களின் ஊழியர்களையும் பிணிப்பதாதலும் வேண்டும்.

ஆணைக்குழுவின் பணிப்புகள் கூட்டுறவுச் சங்க ஊழியர் களைப் பிணிப் பதாதல் வேண்டும்.

15. பிரிவு 11 (2) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தின் எவரேனும் ஊழியர் தொடர்பில் ஆணைக்குழுவினால் கொடுக்கப்படும் எல்லாப் பணிப்புகளும், அத்தகைய பணிப்புகள் அத்தகைய சங்கத்தினால் கொடுக்கப்பட்டன என்றாற்போன்று இறுதியானவையாதலும் அத்தகைய ஊழியரைப் பிணிப்பதாதலும் வேண்டும்.

இந்நியதிச் சட்டத்தைத் தொடர்ந்து ஏற்படும் மாற்றங்கள்.

16. ஆணைக்குழுவினால் வேறுவகையாகக் கட்டளையிடப்பட்டுப் பணிக்கப்பட்டாலொழிய, பின்வருவன தொடர்பில், 1991 செப்ரெம்பர் 25 ஆந் தேதியன்று மேல் மாகாணத்தின் கூட்டுறவு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் தாபிக்கப்பட்ட மேல் மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் கூட்டுறவு சங்கங்கள் தொடர்பாகவும் அவற்றின் ஊழியர்கள் தொடர்பாகவும் வழங்கப்பட்ட எல்லாப் பணிப்புகளும் கட்டளைகளும் செல்லுபடியுடையனவாகவும் இந்நியதிச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும் :

(அ) சம்பள அளவுகள் மற்றும் சேவை நிபந்தனைகள் தொடர்பில் முடிவுசெய்யப்பட்ட சகல வகுப்பாக்கங்கள் ;

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் சகல பணிகள் தொடர்பிலும் செய்யப்பட்ட ஏற்பாடுகள் ;

(இ) ஏற்றுக்கொள்ளப்பட்ட சகல மேன்முறையீடுகள், விசாரணைகள் தொடங்கியுள்ள சகல மேன்முறையீடுகள், விசாரணை முடிவடைந்து முடிவுகள் செய்யப்பட்ட சகல மேன்முறையீடுகள் ;

(ஈ) தொடங்கப்பட்ட சகல சட்ட நடவடிக்கைகள் ;

(உ) வலியுறுத்தப்பட்ட சகல ஒழுங்குவிதிகளும் வழங்கப்பட்ட சுற்றுநிருப அறிவுறுத்தல்களும் ; அத்துடன்

(ஊ) செய்யப்பட்ட சகல நியமனங்களும் பதவி உயர்வுகளும்.

சேவையாற்றும் அலுவலர்களுக்கான பரீட்சைகளும் புதிய சேவை நியதி, நிபந்தனைகளை விதிப்பதன் மீதுள்ள மட்டுப் பாடுகளும்.

17. (1) ஆணைக்குழுவானது, பதவியின் தன்மையையும் அதனோடு தொடர்புபட்ட பொறுப்பையும் கடமைகளையும் கருத்துட்கொண்டு, எவரேனும் ஊழியர் தமது பதவியை வகிப்பதற்கு அவருக்குள்ள திறமையையும் தகுதியினையும் பரீட்சைமூலமோ வேறு வகையாகவோ ஆணைக்குழுவைத் திருப்தி செய்யுமாறு அவ்வூழியரைத் தேவைப்படுத்தலாம் :

ஆயின், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், விதித்துரைக்கப்படக்கூடியவாறான, ஊழியர்களின் ஏதேனும் அத்தகைய வகுதிக்கோ வகுதிகளுக்கோ ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவு ஏற்புடையதான பதவியொன்றை வகிப்பவர் அத்தகைய பதவியை வகிப்பதற்குத் தமக்குள்ள திறமையையும் தகுதியையும் பற்றி ஆணைக்குழுவைத் திருப்திப்படுத்தத் தவறுமிடத்து, ஆணைக் குழுவானது, அவரது சம்மதத்துடன், ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி அவரது திறமைகளுக்கேற்ற பதவியொன்றில் அவரை வைக்க முயலுதல் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு வைக்கத் தவறும் பட்சத்தில் ஆணைக்குழுவானது, அதன் பூரண தற்றுணிபில், அவருக்கு ஏற்புடைத்தான சேவை நியதி, நிபந்தனைகளுக்கிணங்க அல்லது அத்தகைய நியதிகள் இல்லாவிட்டால், நியாயமான அறிவித்தல் கொடுத்தபின்னர், அவரது தொழிலானது அவரது கூட்டுறவுச் சங்கத்தினால் முடிவுறுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தலாம்.

(3) ஓராமுட்பிரிவு ஏற்புடைத்தான பதவியொன்றை வகிப்பவர் ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்பட்ட சேவை நியதி, நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள விரும்புகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆணைக்குழுவை அவர் திருப்திப்படுத்தினாலொழியவும் திருப்திப்படுத்தும்வரையும், அத்தகைய சேவை நியதி, நிபந்தனைகளுக்கு உரித்துடையவராகார்.

வதிவிடத் தகைமைகள்.

18. (1) ஆள் எவரும் அம்மாவட்டத்துக்குள்ளாக ஆகக்குறைந்தது இரண்டு வருட காலப்பகுதிக்கு வதிவுள்ளவராக இருந்தாலொழிய, மேல் மாகாணத்தின் ஏதேனும் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கத்தின் பதவி எதற்கும் அவ்வாள் நியமிக்கப்படுதலாகாது.

(2) ஆயின் எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி, ஏதேனும் மாவட்டத்திலுள்ள ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்திலுள்ள பதவி எதற்கும் அந்த மாவட்டத்தில் பொருத்தமான தேர்வுநாடி எவரும் இல்லாதவிடத்து, ஆணைக்குழுவானது மாகாணத்திலுள்ள வேறொரு மாவட்டத்திலிருந்து பொருத்தமான ஓர் ஆளை நியமிப்பதன்மூலம் அப்பதவியை நிரப்புமாறு அச்சங்கத்தை அனுமதிக்கலாம்.

கூட்டுறவுச் சங்கத்தின் தரத்துக்கும் ஊழியர்களின் தரத்துக்கும் அல்லது வகுப்புக்கும் இணங்க ஊழியர்களின் சம்பள அளவுகள் தீர்மானிக்கப்படுதல்.

19. ஒரு கூட்டுறவுச் சங்கத்திலுள்ள ஒரு பதவிக்கு நியமிக்கப்படும் எவரேனும் ஆளுக்கு, 29 (1) ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்படும்வாறாக அத்தகைய சங்கத்தின் தரத்துக்கு இணங்கவும் ஊழியர்களின் தரத்துக்கு அல்லது வகுப்புக்கு இணங்கவும் அப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

மாகாண அரசாங்க சேவையாளர்களின் மாற்றுச் சேவை.

20. இந்நியதிச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளில் உள்ளது எது எப்படியிருப்பினும், ஆணைக்குழுவானது அமைச்சரின் ஒருப்பாட்டுடனும் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அந்த ஆளினது சம்மதத்துடனும், ஆணைக்குழு அங்கீகரிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீதும் நிபந் தனைகளின்மீதும் அத்தகைய காலப்பகுதிக்கு அந்நோக்கத்துக்காக அச்சங்கத்தில் மாற்றுச் சேவையாற்றுவதற்காக மாகாண அரச சேவையிலுள்ள ஆள் ஒருவரை நியமிக்கலாம்.

கூட்டுறவு ஊழியர்களின் சம்பளங்கள்.

21. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அதன் நிதிகளிலிருந்து அதன் ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகள், எவையேனும் இருப்பின், அவற்றைச் செலுத்துதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் இடமாற்றம்.

22. (1) ஒரு கூட்டுறவுச் சங்கமானது, அச்சங்கத்தின் ஊழியர் எவரையும் அதன் வேலைத் தலங்களில் ஏதேனும் ஒன்றிலிருந்து அதன் வேலைத் தலங்களுள் வேறொன்றுக்கு இடமாற்றம் செய்வதற்குத் தத்துவம்கொண்டதாதல் வேண்டும் ; அத்துடன் ஒழுக்காற்றுக் காரணங்களின்மீது தவிர, வேறு ஏதேனும் காரணத்துக்காக அத்தகைய இடமாற்றம் செய்யப்பட்டவிடத்து, அத்தகைய இடமாற்றமானது அத்தகைய ஊழியரின் வேதனாதிகளைப் பங்கமாகப் பாதித்தலாகாது.

(2) ஒத்த தரத்தினவான பதவிகளை வகிக்கின்ற இரு ஊழியர்களினதும் கூட்டு வேண்டுகோளின்பேரில், ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் எவரேனும் ஊழியரை வேறொரு கூட்டுறவுச் சங்கத்துக்கு, அப்பின்னைய சங்கத்தின் ஊழியர் ஒருவராக இடமாற்றம் செய்வதற்கு ஆணைக்குழு தத்துவம் கொண்டதாதல் வேண்டும் ; ஆயின், முறையே அந்தந்தத் தொழில்தருநர்களின் ஒருப்பாடு ஏற்கனவே பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்க ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குதலும் தண்டித்தலும்.

23. (1) கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர் எவரும், இந்நியதிச்சட்டத்தின் அல்லது அதன்கீழாக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தவிர, ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தினால் இடைநிறுத்தப்படுதல், வேலையிலிருந்து நீக்கப்படுதல் அல்லது வேறுவகையாகத் தண்டிக்கப்படுதல் ஆகாது.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளது எதுவும், நியமித்த தேதியன்று அதன் ஊழியர்களுள் எவருக்கும் எதிராக, அத்தேதிக்கு முன்னர் சம்பவித்த அல்லது எழுந்த ஏதேனும் துர்நடத்தை அல்லது ஒழுக்காற்று மீறுகை அல்லது வேறு ஏதேனும் முறைப்பாடு காரணமாக, அத்தகைய ஏற்பாடுகளுக்கிணங்க வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்குவதோ அல்லது முடிவுறாதிருக்கும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளை அத்தகைய ஏற்பாடுகளுக்கிணங்க இயலக்கூடியவரை தொடர்ந்து முடிப்பதோ கூட்டுறவுச் சங்கம் எதற்கும் சட்டவிரோதமாக்குவதாகக் கருதப்படுதலாகாது.

பிணைப்பொறுப்பு கொடுத்துதவுதல்.

24. (1) கூட்டுறவுச் சங்கமொன்று, ஆணைக்குழு விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையிலும் கூடுதலான பணத்தொகையொன்றை பிணைப்பொறுப்பு வகையாகக் கொடுத்துதவுமாறு எவரேனும் ஊழியரைத் தேவைப்படுத்துதலாகாது.

(2) கூட்டுறவுச் சங்கத்தின் எவரேனும் ஊழியரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் காசுப் பிணைப்பொறுப்பு சங்கத்தின் பெயரில் வங்கியொன்றில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும் ; அத்துடன் அதன்மீது திரளும் ஏதேனும் வட்டி அவ்வூழியருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

ஊழியர்கள் தொடர்பிலான ஒழுங்குவிதிகள்.

25. (1) பின்வருவன தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் —

(அ) கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களை ஆட்சேர்த்தல், நியமித்தல், பதவியுயர்த்துதல், இடமாற்றுதல், பதவிவிலகுதல், சேவைகளை முடிவுறுத்தல் ;

(ஆ) அத்தகைய ஊழியர்களைத் தொழிலுக்கமர்த்துவதற்கான நியதி, நிபந்தனைகளை விதித்துரைத்தல், சம்பள அளவுகளை ஏற்பாடு செய்தல், படிகளையும் பணிக்கொடைகளையும் கொடுத்தல், முற்பணங்கள் வழங்குதல், முடிவுறுத்தல், அலுவலர்களின் லீவு, அவர்களைத் தொழிலிருந்து நிறுத்தி வைத்தல், நியமனங்களை முடிவுறுத்தல், வேலையிலிருந்து நீக்குதல், அத்தகைய ஊழியர்களுக்கு வேறு எவையேனும் வகையான தண்டனையை விதித்தல், அதிலிருந்து மேன்முறையீடு செய்தல் ; அத்துடன்

(இ) அவசியமெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய ஊழியர்களின் தொழில் நியதிகள் அல்லது சேவை நிபந்தனைகள் அல்லது வேறு ஏதேனும் கருமம் தொடர்பிலான அத்தகைய வேறு விடயங்கள்.

(2) ஒராமுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களையும் அவற்றின் ஊழியர்களையும் பிணிப்பதாதல் வேண்டும்.

(3) 1972 ம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச்சட்டத்தின் கீழாக்கப்பட்டு 1981 திசெம்பர் 1 ஆந் திகதிய 169/8 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், அமைச்சரால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படும் அத்தகைய காலம் வரைக்கும் தொடர்ந்து வலுவுடையனவாதலும் பயனுடையனவாதலும் வேண்டும்.

ஊழியர்கள் தொடர்பில் கூட்டுறவுச் சங்கத்துக்குள்ள கடமை.

26. மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றும் —

(அ) அதன் ஊழியர் ஒவ்வொருவர் தொடர்பிலும் விதித்துரைக்கப்பட்ட இடாப்புகளையும் பதிவேடுகளையும் வைத்திருந்து பேணி வருதல் வேண்டும் என்பதுடன் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒவ்வொரு ஊழியர் தொடர்பிலானதுமான அத்தகைய விவரங்கள் எல்லாவற்றையும் அவற்றின்கண் பதிதலும் வேண்டும்.

(ஆ) அதன் ஊழியர்கள் தொடர்பில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரத்திரட்டுக்களை அல்லது அறிக்கைகளை அல்லது ஆணைக்குழு காலத்துக்குக்காலம் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலை ஆணைக்குழுவுக்குக் கொடுத்துதவுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அதன்சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது சேவையாள் அதன் அலுவலகங்களுள் எதனுள்ளும் நுழைவதற்கும் அதன்கண் வைத்திருக்கப்படும் எவையேனும் புத்தகங்கள், கணக்குகள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளை எடுப்பதற்கும் அனுமதித்தல் வேண்டும்.

ஊழியர் சகாய நிதியமும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமும்.

27. தொழில் தருநராக இருக்கின்ற ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அச்சங்கத்தின் ஒவ்வோர் ஊழியரும் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய தொகைகளைக் காலந்தோறும் ஊழியர் சகாய நிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்துக்கும் உதவுதொகையாகச் செலுத்துதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்க ஊழியர் சங்கத்தின் ஊழியர்களே அன்றி ஆணைக் குழுவின் ஊழியர்கள் அல்ல.

28. ஐயுறவுகளை நீக்கும்பொருட்டு, இந்நியதிச்சட்டம் பயனுறும் தேதிக்குமுன்னர் தொழிலுக்கமர்த்தப்பட்டாலுஞ்சரி பின்னர் தொழிலுக்கமர்த்தப்பட்டாலுஞ்சரி, எல்லா ஊழியர்களும் தாம் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள சங்கத்தின் சேவையாளர்களாதலும் அவர்கள் சங்கத்துக்குத் தமது விசுவாசத்தைத் தெரிவிக்கவேண்டியவர்கள் எனவும் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

## பாகம் III

### ஆணையாளரின் தத்துவங்கள்

ஆணையாளர் சங்கங்களைத் தரம்பிரித்து பணியாட் டொகுதியினைத் தீர்மானித்தல்.

29. (1) கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள பதவிகளுக்கான சம்பள அளவுத் திட்டங்களை நிர்ணயிக்கும் நோக்கத்துக்காக ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தையும் தரம்பிரிப்பதற்கும், ஊழியர்களின் தரங்களை அல்லது வகுப்புக்களையும் அத்தகைய தரத்தில் அல்லது வகுப்பில் இருக்கவேண்டிய ஊழியர் தொகையையும் தீர்மானிப்பதற்கும், காலத்துக்குக்காலம் அவர் அவசியமெனக் கருதும்வாறாக அதனை வேறுபடுத்துவதற்கும் ஆணையாளர் தத்துவம் கொண்டவராதல் வேண்டும்.

(2) கூட்டுறவுச் சங்கம் எதுவும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையாளரினால் செய்யப்பட்ட தீர்மானத்துக்கு முரணாக ஆள் எவரையும் தொழிலுக்கமர்த்துதலாகாது.

தகுதி, சம்பள அளவுகள், முதலியன தொடர்பில் ஆணைக்குழு ஆணையாளரின் ஒருப்பாட்டைப் பெறுதல்.

30. ஆணைக்குழுவானது, ஆணையாளரின் ஒருப்பாட்டுடன், கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள ஏதேனும் பதவிக்கு நியமிப்பதற்கு அவசியமான தகைமைகளைத் தீர்மானித்தல், ஏதேனும் வகுப்பில் அல்லது தரத்தில் உள்ள ஏதேனும் அத்தகைய பதவிக்கு அல்லது பதவிகளுக்கு உரிய சம்பள அளவுத்திட்டத் திட்டங்களை நிர்ணயத்தில், காலத்துக்குக்காலம் அத்தகைய சம்பள அளவுத்திட்டங்களை மீளாய்வு செய்தல் வேண்டும்.

## பாகம் IV

### பல்லினமானவை

இடர்ப்பாடுகளை நீக்குதல்.

31. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதில், இந்நியதிச் சட்டத்தினால் ஏற்பாடு எதுவும் அல்லது பயனுள்ள ஏற்பாடு எதுவும் செய்யப்படாத ஏதேனும் விடயம் அல்லது கருமம் தொடர்பாக ஏதேனும் சந்தேகம் அல்லது இடர்ப்பாடு எழுமானால், அமைச்சர், கட்டளைமூலம் அந்தச் சந்தேகத்தை அல்லது இடர்ப்பாட்டை அகற்றலாம் அல்லது தீர்மானிக்கலாம். அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு வெளியிடப்பட்டதும் இதனகத்துச் சட்டமாக்கப்பட்டாற்போன்று செல்லுபடியும் பயனும்கொண்டதாதல் வேண்டும் என்பதுடன் சட்டவலுவுடையதாதலும் வேண்டும்.

ஆணைக்குழு ஒழுங்குவிதிகளை ஆக்குதல்.

32. (1) வெளிப்படையாக வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, இந்நியதிச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் அத்துடன் விதித்துரைக்கப்பட வேண்டுமென இந்நியதிச்சட்டத்தில் கூறப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகள் உட்பட, இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு அல்லது அதன் நெறிகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமானவையென ஆணைக்குழுவுக்குத் தோற்றக் கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகள் எல்லாவற்றையும் ஆணைக்குழு ஆக்கலாம்.

(2) அத்தகைய ஒழுங்குவிதிகள் எவையும் மேல்மாகாண மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவித்தல் அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படும்வரை பயனுடையதாதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன்மேல் எந்த ஒழுங்குவிதியை அந்த அறிவித்தல் தொடர்புறுத்துகிறதோ அந்த ஒழுங்குவிதி இதனகத்துச் சட்டமாக்கப் பட்டாற்போன்று செல்லுபடியும் பயனும் கொண்டதாதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் தனிப்பட்ட உறுப்பினர்களின் பாதிப்பின்மை.

33. குற்றவியல் அல்லது குடியியல் வழக்கு, துடர்ச்சி அல்லது வேறு நடவடிக்கை எதுவும் ஆணைக்குழுவின் எவரேனும் தனிப்பட்ட உறுப்பினருக்கு எதிராகவோ அல்லது அத்தகைய உறுப்பினர் அல்லது அலுவலர் என்ற தன்மையில் அல்லது கூட்டிணைப்புத் தன்மையில் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட செயல் அல்லது செய்யாது விடப்பட்ட செயல் அல்லது எடுக்கப்பட்ட செயல் அல்லது எடுக்கப்பட்ட முடிவு தொடர்பில் ஆணைக்குழுவில் அலுவலருக்கு எதிராகவோ தொடரப்படுதலோ தொடர்ந்து நடாத்தப்படுதலோ ஆகாது.

ஒப்பந்த, அமய அல்லது நாட்சம்பள ஊழியர்களை ஈடுபடுத்துதல்.

34. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், ஒரு கூட்டுறவுச் சங்கமானது அதன் திறமையான செயற்பாட்டை மனதிற்கொண்டு —

(அ) ஆணைக்குழுவின் முன் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு நிபுணர் ஒருவரின் அல்லது எவரேனும் சிறப்பறிஞரின் சேவைகளைப் பெறலாம் ;

(ஆ) அமய அல்லது நாட்சம்பள ஊழியர்களை ஈடுபடுத்தலாம் அல்லது துண்டு வேலை அடிப்படையில் ஊழியர்களை ஈடுபடுத்தலாம் ;

ஆயின் எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் ஒருப்பாடு இல்லாமல் அத்தகைய ஊழியர்களுக்குப் பதவி நிரந்தரம் எதுவும் வழங்கப்படுதலாகாது.

தவறுகள்.

35. (1) ஏதேனும் கூட்டுறவுச் சங்கம், அல்லது குழு, குழுவின் உறுப்பினர், அல்லது குழுவின் உறுப்பினர்கள் அல்லது சங்கத்தின் பணிப்பாளர், சங்கத்தின் பணிப்பாளர்கள், அதன் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் —

(அ) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறினால் ; அல்லது

(ஆ) ஆணைக்குழுவினால் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது ஆணைக்குழுவினால் அல்லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஆளினால் இந்நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுதற்கு வேண்டுமென்று அசட்டை செய்தால், மறுத்தால் அல்லது தவறினால் ; அல்லது

(இ) பொய்யான விவரத்திரட்டை ஆக்கினால் அல்லது பொய்யான தகவலைக் கொடுத்துதவினால்,

இந்நியதிச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தவறைப் புரிகின்ற ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அல்லது ஆளும் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு ஆளாதல் வேண்டும்.

(3) இந்நியதிச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு கூட்டுறவுச் சங்கத்தினால் புரியப்பட்டவிடத்து, அச்சங்கத்தின் ஒவ்வோர் அலுவலரும், அத்தவறு தமது அறிவில்லாமல் புரியப்பட்டதென அல்லது அத்தவறு புரியப்படுதலைத் தடுப்பதற்குத் தம்மாலியன்ற விழிப்புக்கவனம் எல்லாவற்றையும் தாம் பிரயோகித்தாரென எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எவரேனும் ஊழியரை மீள வேலைக்கமர்த்துமாறு தேவைப்படுத்தி ஆணைக்குழுவினால் கொடுக்கப்பட்ட எவையேனும் அத்தகைய அறிவுறுத்துரைகளை அல்லது கட்டளையை நிறைவேற்றத் தவறியமைக்காக ஏதேனும் கூட்டுறவுச்சங்கம் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது, அத்தகைய கூட்டுறவுச் சங்கமானது —

(i) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அத்தகைய கூட்டுறவுச் சங்கத்தின்மீது விதிக்கப்படக்கூடிய ஏதேனும் தண்டனையுடன் மேலதிகமாக, குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் அத்தவறுகை தொடரப்படும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாக் குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன்

(ii) ஆணைக்குழுவின் அறிவுறுத்துரைகளுக்கிணங்க சேவையில் மீளத் தொழிலுக்கு அமர்த்தப்பட்டிருக்க வேண்டிய தேதியன்றிலிருந்து தொடங்கி அத்தகைய கூட்டுறவுச் சங்கம் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது ஒவ்வொரு நாளுக்கும் அவரது சேவைகள் முடிவுறுத்தப்பட்டிராவிட்டால் அவர் உரித்துடையவராக இருந்திருக்கக்கூடிய சம்பளத்தின் அல்லது கூலிகளின் வீதத்தில் கணக்கிடப்பட்ட வேதனத்தை அத்தகைய ஊழியருக்குக் கொடுத்தல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் (ii) ஆம் பந்தியின்கீழ் கூட்டுறவுச் சங்கம் கொடுப்பதற்கு பொறுப்புடையதாகவுள்ள ஏதேனும் பணத்தொகை, எந்நீதிமன்றத்தினால் அது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதோ அந்நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று நீதிமன்றக் கட்டளைமூலம் அறவிடப்படலாம் ; அத்துடன் அவ்வாறு அறவிடப்பட்ட தொகை ஊழியருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழுவுடன் தலையிடுதல்.

36. ஆள் ஒவ்வொருவரும், தமது கடமையின்போது தவிர, வேறு வகையாக, நேரடியாகவோ மறைமுகமாகவோ, தாமாகவோ வேறு எவரேனும் ஆள் மூலமாகவோ எத்தன்மைத்தான எம்முறையிலேனும் ஆணைக்குழுவின் ஏதேனும் முடிவை அல்லது அதன் எவரேனும் உறுப்பினரைச் செல்வாக்குக்குட்படுத்துகின்ற அல்லது செல்வாக்குக்குட்படுத்த முனைகின்ற அத்தகைய ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க விசாரணையின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது ஒரு வருடத்துக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

அதிகாரமளிக்கப்படாமல் தகவலை வெளிவிடல் தடுக்கப்பட்டுள்ளது.

37. ஆணைக்குழுவின் உறுப்பினர் எவரும் அல்லது ஆணைக்குழுவின் செயலாளர், அல்லது ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி உறுப்பினர் எவரும் அல்லது வேறு ஆள் எவரும், தமது அலுவலகப் பணிகளைப் பிரயோகிக்கும்போது தவிர வேறுவகையாக, தமது கடமைகளின்போது அவரது அறிவுக்கு எட்டிய எத்தன்மைத்தான ஆவணம், கடிதத்தொடர்பு அல்லது தகவல் எதனதும் உள்ளடக்கங்களை வெளியிடுதலோ ஆள் எவருக்கும் வெளிவிடுதலோ ஆகாது.

ஆணைக்குழுவின் கடிதத் தொடர்புகள் சிறப்புரிமை கொண்டனவாதல்.

38. ஆள் எவரும், சட்ட நடவடிக்கைகள் எதிலும் ஆணைக்குழுவுக்கும் அல்லது எவரேனும் உறுப்பினருக்கும் அல்லது அலுவலருக்கும், ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்துக்கும் அல்லது அத்தகைய சங்கத்தின் முகாமைக் குழுவின் எவரேனும் உறுப்பினருக்கும் அல்லது அதன் அலுவலருக்கும் இடையே இடம்பெற்ற அல்லது ஆணைக்குழுவின் பணிகளுள் எதனையும் பிரயோகிப்பது தொடர்பாக இடம்பெற்ற எழுத்திலான அல்லது வாய்மூல கடிதத்தொடர்பு எதனையும், அவ்வாறு காண்பிப்பதற்கு அல்லது வெளிவிடுவதற்குத் தலைவர் எழுத்தில் சம்மதித்தாலொழிய, காண்பிப்பதற்கு அல்லது வெளிவிடுவதற்கு அனுமதிக்கப்படுதலோ அல்லது கட்டாயப்படுத்தப்படுதலோ ஆகாது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அதன் ஊழியர்களுக்கும் கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தை ஏற்புடைத்தாக்குதல்.

39. (1) கைத்தொழிற்பிணக்குகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தொழில் நியாயசபை ஒன்று, ஊழியர் ஒருவரினால் அதே விடயம் அல்லது பொருளளவில் அதே விடயம் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தால், அதே விடயம் தொடர்பில் நிவாரணம் கோரி அச்சட்டத்தின் 31 ஆ என்னும் பிரிவின்கீழ் அத்தகைய ஊழியரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(2) ஆணைக்குழுவானது, ஊழியர் ஒருவரினால் கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தொழில் நியாயசபை ஒன்றுக்கு அதே விடயம் தொடர்பில் அல்லது பொருளளவில் அதே விடயம் தொடர்பில் விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தால் அதே விடயம் தொடர்பில் அவ்வூழியரிடமிருந்து மேன்முறையீடொன்றை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

பொருள்கோடல்.

40. (1) இந்நியதிச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —

" ஆணைக்குழு " என்பது, மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என்று பொருளாகும் ;

" ஆணையாளர் " என்பது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எனவும் மேல்மாகாணக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் எனவும் பொருள்படும் ;

" கூட்டுறவுச் சங்கம் " என்பது கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பிலான சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டு மேல் மாகாணத்துக்குள்ளாகத் தொழிற்படும் அதன் தலைமை அலுவலகத்தை மேல் மாகாணத்துக்குள் கொண்டிருக்கும் சங்கம் என்று பொருளாகும் ;

" மாவட்டம் " என்பது மேல் மாகாணத்துக்குள்ளாக இருக்கும் ஒரு நிருவாக மாவட்டம் என்று பொருளாகும் ;

" ஊழியர் " என்பது இந்நியதிச்சட்டத்தின் பொருளுக்குட்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர் என்று பொருளாகும் ;

" அமைச்சர் " என்பது மேல் மாகாணத்தில் " கூட்டுறவு அபிவிருத்தி " என்னும் விடயம் அல்லது பணி குறித்தொதுக்கப்பட்ட மாகாண அமைச்சர் என்று பொருளாகும் ;

" விதித்துரைக்கப்பட்ட " என்பது ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி மூலம் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்.

(2) இந்த நியதிச்சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில உரைகளிடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

கடந்தகாலத்தையும் உள்ளடக்கும் தொழிற்பாடு.

41. இந்த நியதிச்சட்டமானது எல்லா நோக்கங்களுக்காகவும் 1991 செத்தெம்பர் 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டதென்பதுடன் நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க 1991 செத்தெம்பர் 1 ஆந் திகதியன்றிலிருந்து (மேல் மாகாண) கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவையும் இந்நியதிச் சட்டத்தின் 3 ஆம், 4 (1), (2) ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி அதன் மூன்று உறுப்பினர்களையும் நியமிப்பதற்கு அமைச்சர் தத்துவமும் அதிகாரமும் உரித்தாக்கப்பட்டிருப்பவராகக் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க, 1991 ஒற்றோபர் 25 ஆந் தேதிய 686 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டதும் 1991 செத்தெம்பர் 25 ஆந் தேதியிட்ட அமைச்சரினால் செய்யப்பட்டதுமான (மேல் மாகாண) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினதும் அதன் மூன்று உறுப்பினர்களினதும் நியமனம் இந்நியதிச் சட்டத்திற்கிணங்க செல்லுபடியுடைய விதமாகச் செய்யப்பட்டிருப்பதாகவும் செய்யப்பட்டதாகவும், அத்துடன் (மேல் மாகாண) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செல்லுபடியுடையவிதமாகத் தாபிக்கப்பட்டிருப்பதாகவும் கருதப்படுதலும் வேண்டும்.

## அட்டவணை

### ஆணைக்குழு உறுப்பினரின் சத்தியம் அல்லது உறுதிமொழி

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவராக/உறுப்பினராக நியமிக்கப்பட்டவரான . . . . . . . . . . . . ஆகிய நான் மேல் மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர் பதவிக்குரிய பணிகளைப் பயமோ நயமோ இன்றியும் பட்சமோ பேதமோ பாராட்டாமலும் நிறைவேற்றுவேன் எனவும், எனது கடமையின்போது தவிர வேறுவகையாக அத்தகைய பணிகள் தொடர்பிலான எக்கருமங்களையும் ஆள் எவருக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வெளிவிடமாட்டேன் எனவும் இத்தால் சத்தியஞ்செய்கின்றேன்/பயபக்தியுடனும் விசுவாசமாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

19 . . . . ஆம் ஆண்டு . . . . . . . . மாதம் . . . . . . . . ஆந் நாளாகிய இன்று என் முன்னிலையில் சத்தியஞ்செய்யப்பட்டது/உறுதிப்படுத்தப்பட்டது.

———————,
உயர்நீதிமன்ற நீதிபதி.

### ஆணைக்குழு அலுவலரின் சத்தியம் அல்லது உறுதிமொழி

மேல் மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர்/அலுவலர் பணிகளைப் பிரயோகிப்பதற்கு அழைக்கப்பட்டுள்ளவரான . . . . . . . . . . . . . . . . ஆகிய நான் மேல் மாகாணத்தின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர்,அலுவலர் என்ற எனது கடமைகளின்போது எனது அறிவுக்கு எட்டக்கூடிய எத்தன்மைத்தான ஏதேனும் ஆவணத்தின், கடிதத் தொடர்பின் அல்லது தகவலின் உள்ளடக்கங்களை அல்லது உள்ளடக்கங்களின் ஏதேனும் பாகத்தை, கடமையின்போது தவிர வேறுவகையாக ஆள் எவருக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வெளிவிடமாட்டேன் எனச் சத்தியஞ் செய்கின்றேன்/பயபக்தியுடனும் விசுவாசமாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

19 . . . . ஆம் ஆண்டு . . . . . . . . மாதம் . . . . . . . . ஆந் நாளாகிய இன்று என் முன்னிலையில் சத்தியஞ்செய்யப்பட்டது/உறுதிப்படுத்தப்பட்டது.

———————,
மேல் மாகாண கூட்டுறவு ஊழியர்
ஆணைக்குழுத் தலைவர்.